# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 12 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## இலட்சியமும் சமநோக்கும்

1. இலட்சியமும் சமநோக்கும் எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்? எத்தொகுப்பில் இடம்பெற்றது?

2. **"உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினுஞ்**
   **செயிருடன் வந்த இச் சேயிழை தன்னினும்.**
   அ. இக் கூற்று யாரால் யாரிடம் வினவப்பட்டது?
   ஆ. இங்கு உயிருடன் சென்ற ஒரு மகள், செயிருடன் வந்த சேயிழை யாவர்?

3 **"ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்..**
   அ. இங்கு பயிலப்பட்டுள்ள அணி யாது?
   ஆ. ஈமஞ்சேர் மாலை என்பதன் கருத்து யாது?

4 **"ஊனமேயான ஊனிடை இருக்கும் உயிரினைத்**
   **துறந்துமொண் பூணாம்..**
   அ. இங்கு யாருடைய இலட்சிய நெறி கூறப்படுகின்றது?
   ஆ. எதனைத் துறந்து எதனை காக்க வேண்டும் என்கின்றான் அர்ச்சுனன்?

5 **"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
   அ. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் யாது?
   ஆ. இங்கு யாருடைய இலட்சிய நெறி புலப்படுகின்றது

6. **"நிதியிழந்தனம் இனி நமக்கு உளதென நினைக்கும்**
   **கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்றான்"**
   அ. இவ்வடிகளில் வெளிப்படும் இலட்சியவாதி யார்?
   ஆ. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள இலக்கியம் எது? அதன் ஆசிரியர் யார்?
   இ. கட்டுரை என்பது உணர்த்தும் பொருள் யாது?

7. **"மதியிழந்து தன் வாயிழந்து அருந்தவன் மறைந்தான்..**
   அ. வாயிழந்து என்பதால் சுட்டப்படுவது யாது?
   ஆ. அருந்தவன் எனப்படுபவன் யார்?

8. சமநிலையில் நின்று இலட்சியத்தை அடைந்த இருவரும் யாவர்.

9. **"நரகம் புகினும் எள்ளேன் திருவருளாயிருக்கப் பெறின் இறைவா...**
   அ. இவ்வாறு கூறியவர் யார்?
   ஆ. எதற்குத் தான் தயங்க மாட்டேன் என உரைக்கின்றார்?

10. **இந்த நாய்க்கு உரிமையில்லா முக்தியுலகம் எனக்கு வேண்டாம்..**
   அ. மேற்படி கூற்றைக் கூறியது யார்?
   ஆ. அக் கதாபாத்திரத்துடன் தொடர்புடைய இதிகாசம் எது?

11. **சத்தியத்திற்கும் தருமத்திற்கும் இடையில் நின்று ஊசாலாடுகின்ற அரசன் நினைக்கின்றான்..**

அ. இங்கு அரசன் எனப்படுபவன் யார்?

ஆ. ஊசலாடுதல் என்பது குறிக்கும் கருத்து யாது?

இ. இங்கு சத்தியம் என்று கூறப்படும் விடயம் யாது? தருமம் எனக் கூறப்படுவது யாது?

12. தனிமனிதனை நிலைக்களனாக கொண்டு நல்லறங்களை வகுத்தோதிய பெருந்தகை யார்?

13 தமது இலட்சியப்பயனை தியாகம் செய்து சமபுத்தியில் சிகரத்தில் நின்றோர் யார்?

## பகுதி 02

01. சமூகத்தின் அடிப்படை அமைப்பினை நிலைகுலைய செய்வோர் யாவர்?

02. இலட்சியவாதிகளுக்கு இலட்சியத்திலும் பெரிது வேறொன்றுமில்லை என்பதை நிறுவ கட்டுரையாசிரியர் எடுத்து காட்டும் இலக்கியம் யாது?

03. இன்பப் பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைகின்றது.

அ. இதில் இடம்பெற்றுள்ள அணி என்ன?

ஆ. இங்கு உடலாகவும் உயிராகவும் கருதப்படுபவை எவை?

04 இலட்சியம் என்பது பற்றி கட்டுரையாசிரியர் யாது கூறுகின்றார்?

05. இக்கட்டுரையில் இலக்கியங்கள் எடுத்துக்காட்டும் இலட்சிய வாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

06. இலட்சியவாதிகள் குறித்து கட்டுரையாசிரியரின் கருத்து யாது?

07. நாம் இலக்கியங்களை படிக்கும் போது அறிந்து கொள்வது யாது என இக்கட்டுரை கூறுகின்றது.

08. காந்தியடிகளின் இலட்சியம், அவரது சிறப்பு பற்றி கட்டுரையாசிரியரின் கருத்து யாது?

09. இக் கட்டுரையில் இலட்சியங்களை கடைப்பிடித்த இலட்சியவாதிகளின் இலட்சிய நெறி பற்றி இலக்கியங்களில் கூறப்படுவனவற்றை விளக்குக?

10. இக் கட்டுரையாசிரியர் புலவர் மணியின் மொழி நடைச் சிறப்புக்களை எடுத்துரைக்குக?